REGISTERED.

பாலசந்திரன்

BALACHANDRAN,

வாரததிற்கு ஒரு முறை
சனிவாரந்தோறும் பிரசுரஞ்செய்யப்படும்.
உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி இலகுஞ் சிவனெம் மிறை.

புத்தகம்-1. கொழும்பு, 1910-ம் ஆ ஒக்டோபர் மீ 29-ந்வ சனிக் கிழமை இலக்கம்-2

உ
திருச்சிற்றம்பலம்.

வானிலவும் பான்மதியை வைத்தசடை வானுதனும்
பானிலவு மோர்கோடும் பற்றிடுவே — றானிலவு
மெம்பெருமா னம்பிகையோ டேரம்ப மூர்த்திகந்தன்
றம்பதுமத் தாளே நலே.

பால சந்திரன்.

(1) கொழும்பு, செக்கடித்தெரு 103ம் இலக்க வீட்டில் "குகதாச" அச்சியந்திரசாலை தாபிக்கப்பட்டிருக்கின்றது.

(2) இவ்வியந்திரத்திலே "பாலசந்திரன்" என்னும் இப் பத்திரிகை சனி வாரந்தோறும் பிரகடனம் செய்யப்பெறும்.

(3) கல்வி, அரசியல், வழக்கு, வியாபாரம், வேளாண்மை முதலியவைகளும், அவ்வவ்வூரிலே நடக்கும் முக்கிய சம்பவங்களும் விசேஷமாக இப்பத்திரிகையிற் பேசப்படும்.

(4) மனு நிந்தனை மத நிந்தனை முதலிய, துர் விஷயங்கள் ஒருபோதும் இடம்பெறா.

பத்திரிகைக் கிரயம்,

கொழும்புக்கு ௵ ஒன்றுக்கு	ரூ.3-00.
இலங்கையின் பிற விடங்களுக்கும் இந்தியாவுக்கும் ரூபா	,, 4-00
சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு	,5-00
தனிப் பிரதி	0-10

இப்பத்திரிகை எடுப்பவர்கள் தாமெடுக்குங்காலத்துப் பணத்தை முன்னேறக் கொடுத்தல்வேண்டும். அப்படிக்கொடாதொழியின், வருஷமொன்றுக்கு ரூபா 1-25 விகிதங்கூட்டிக்கொடுத்தல்வேண்டும்.

இப்பத்திரிகையிற் பிரசுரஞ்செய்யப்படவேண்டிய கடிதங்கள் மாத்திரம் பத்திராதிபருக்கெனவும், இப்பத்திரிகைக்குரிய பிறகடிதங்கள், பணம் முதலியவை இவ்வச்சியந்திரசாலைக்கு அதிபராகிய

ஸ்ரீ. வே. பொன்னம்பலபிள்ளை
"குகதாச அச்சியந்திரசாலை"
103-, செக்கடித்தெரு
கொழும்பு

எனவும் விலாசமிட்டனுப்பப்படல் வேண்டும்.

பத்திரிகை எடுக்க விரும்புவோர் பத்திராதிபரிடம் எழுத்து மூலமாகக் கேட்டுக்கொள்ளல் வேண்டும். தாங் கொடுக்கவேண்டிய நிலுவையைத்தீர்த்துப் பத்திரிகை வேண்டாமென்று எழுத்துமூலமாகத் தெரிவிக்கும் வரைக்கும் பத்திரிகை அனுப்பப்படும்;

விளம்பரங்களுக்குச் செலவு.

பத்து வரிக்குள் ஒவ்வொரு வரிக்கு சதம்	10.
பத்துக்குமேல் ஒவ்வொருவரிக்கும்	8.
பந்தி ஒன்றுக்கு ரூபா	5—00.
அரைப் பந்திக்கு ரூபா	3—50.
கால் பந்திக்கு ரூபா	2—50.
சுருக்கமானசனனமரண விவாக விளம்பரங்கள் ரூபா	0—50

பெரிய எழுத்திலே பதிப்பிக்க வேண்டிய விளம்பரங்களுக்கும் ஒரு முறையேயன்றிப் பலமுறை வெளிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கும் இங்கிலீசிற் பதிப்பிக்கப்படும் விளம்பரங்களுஞ் செலவை, அதிபரை நேரிற் கண்டு ஒழுங்கு செய்துகொள்ளல் வேண்டும்.

கடித விதானங்கள்.

(1) கடித கர்த்தர்கள் தாம் எழுதக்குறித்த விஷயங்களை நல்ல வெள்ளைக்காகிதத்தில் ஒருபுறத்தில் மசியினால் வரிகள் நெருங்காது அட்சரங்கள் வெவ்வேறாய்ப் புலப்படும்படி திருத்தமாக எழுதல் வேண்டும்.

(2) வாசிப்பவர்களுக்கு அறிவையும் மகிழ்ச்சியையும் வியப்பையும் தரத்தக்க நற்கருமங்களையே கடிதங்களில் அமைத்தெழுதல் வேண்டும்.

(3) பயனில்லாத சொற்றொடர்களையும் தூஷணங்கள்பொதிந்த சொற்றொடர்களையும், கடிதத்தி லெழுதலாகாது.

(4) பொருள் இனிது விளங்கும்படி வாக்கியங்களை இயன்றமட்டும் சுருக்கி யெழுதல்வேண்டும்.

(5) வாக்கியங்கள் தொடர்ப்பட்டு நீளவிடாமல் அணிமையில் வினைமுற்றுக்கொடுத்துச் சிறுச்சிறு வாக்கியங்களாக எழுதல்மிகநன்று

(6) கடிதகர்த்தர் தமது சுய ஊர் பெயர் விலாசம் முதலியவை பத்திராசிரியர்க்குப் புலப்படும்படி தம் கடிதத்தில் குறித்தல்வேண்டும்.

(7) பத்திரிகையில் பிரசுரிக்கத்தகாதனவென்று காணப்படுங்கடிதங்கள் கடிதகர்த்தர்களுக்குத் திருப்பி யனுப்பப்படா. கடிதங்களிலுள்ள கடுஞ்சொற்களும் தீப்பொருள்களும் பரிகரிக்கப்படும். கடிதகர்த்தர்களுடைய அபிப்பிராயங்கள் பத்திராசிரியரைச்சாரமாட்டா.

NOTICE.

விளம்பரம்.

யாழ்ப்பாணம்
கடையிற் சுவாமிகள்
திருவுருப்படம்.

யாழ்ப்பாணத்திலே ஏறக்குறைய 32 வருடங்களாக வசித்து அரும்பெரும் அற்புதங்கள் பலவற்றைச் செய்து சமாதிகூடிய இம் மகானுடைய திருவுருப்படம் அங்கிலேய இயந்திரசாலையில் மிக அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றது. மட்டைசேர்த்துக் கண்ணாடியிட்டு வைத்துக்கொள்ளுதற்கேற்ற தக்க பிரமாண முடையது.

விலை பிரதியொன்றுக்கு சதம் 25

விவேகாநந்த சுவாமிகள் இலங்கை விஜயம், அவரின் சரித்திரம், பிரசங்கங்களும் அவருடைய படமும் அடங்கி யிருக்கின்றது. (இங்கிலிஸ்) விலை சதம் 30.

சுப்பிரமணிய பிரபாவம் ,, 25,
சிவராத்திரி மான்மியவசனம் ,, 25,

பிறவூரவர்களுக்கு வி. பி. மூலமாகவும் அனுப்பப்படும். தவாற்செலவு பிரத்தியேகம். வேண்டுவோர் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

செ. வேலாயுதன்.
42-கன்னாரவீதி.
கொழும்பு.

பால சந்திரன்.

சாதாரண ௵ ஐப்பசி மீ ௧௨ ந்வ

தீபாவலி.

நரக சதுர்த்தசி ஸ்நானம்.

தீபாவலி என்பதும் வேறு. நரக சதுர்த்தசி ஸ்நானம் என்பதும்வேறு. தீபாவலியாவது ஐப்பசிமாசத்து அபரபக்க சதுர்த்தசி முதன்மூன்று தினங்களேயாம். ஆயினும் இந்த மூன்று தினங்களுள்ளும் அமாவாசியை யடுத்த சுவாதி நக்ஷத்திர தினமே தீபாவலிக்குச்சிரேட்டமாம். இந்தத் தினத்திலே பிரதோஷகாலத்திலே ஸ்திரிகள் தங்கள் தங்கள் வாசஸ்தானங்களைச் சுத்திசெய்து அலங்கரித்து பந்திபந்தியாகத் தீபங்களை வைத்து இலக்குமிபூசை செய்வதினாலேயே இத்தினத்திற்குத் தீபாவலியென்று பெயராயிற்று. தீப+ஆவலி என்னும் பதங்கள் தீபாவலி யென சமஸ்கிருத சந்திவிதிபெற்றன. இவ்விருபதங்களுக்கும் முறையே தீபங்களினுடைய நிரைகள் என்பது அர்த்தமாம்.

இனி நரகசதுர்த்தி ஸ்நான வரலாறு:—பாண்டவர் பன்னிரண்டு வருடம் வனவாசஞ்செய்தபோது, விட்டுணுவும், வீட்டுமரும் அப்பாண்டவர்களைச் சந்திக்கும்பொருட்டு அவர்களுறைவிடத்துக்குச் சென்றார்கள். அவ்விருவரையுங்கண்ட தரும புத்திரர் தமது தம்பிமாரோடு அவர்களை எதிர்சென்று வணங்கி அழைத்துவந்து உபசரித்து அவர்களை நோக்கி! "எம் படும் துன்பங்களெல்லாம் நீங்கிச் சுகப்படத்தக்க பரிகாரங்களுளவேல் அவற்றையருளிச்செய்தல் வேண்டு" மெனப்பிரார்த்தித்தனர். அதைக்கேட்ட விட்டுணு தாம் அவசிம் துவாரகைக்குச் செல்லவேண்டுமென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு வீட்டுமரை. தருமபுத்திரருக்குச் சொல்லவேண்டியவற்றைச் சொல்லும்படி கட்டளையிட்டுச் சென்றனர். வீட்டுமர் பின்வருமாறு சொல்வாராயினர்:—

"பாண்டு புத்திரர்களே! பிராக்குச் சோதிஷமென்னும் பட்டணத்துக்கிறைவனாகிய நரகாசுரன், பிரமதேவரை நோக்கித் தவஞ்செய்து அரியவரங்களைப்பெற்றுத் தான் விரும்பியவற்றையெல்லாம் செய்து தேவர்களுக்குப் பல விடையூறுகளை இயற்றித் தேவேந்திரனைத் தோற்கச்செய்து அவன் காதிலணிந்திருந்த குண்டலங்களையும் மற்றுந் தனக்கு வேண்டியவற்றையும் கைப்பற்றித் தனக்கொப்பாரும் மிக்காருமில்லாது அரசியற்றுவானாயினன்.

இவ்வநீதியைத் தேவேந்திரனும் முன் அவ்வரக்கனாற் றுன்படைந்த பதரிவனவாசிகளாகிய முனி கூட்டங்களும் விட்டுணுவினிடத்தில் முறையிட, காத்தற்றொழிலையுடைய அவ்விட்டுணு, யுத்தகோலத்தோடு சத்தியபாமாசமேதராய்க் கருடவாகன ரூடராய்ப்புறப்பட்டு பிராக்குச் சோதிஷமென்னும் பட்டணத்தையடைந்து, 'முராசுரன், நிசுந்தன், அயக்கிரீவன், அகோரபாலன், விருபாட்சன், பிராபணன்' பஞ்சசனன் முதலிய சேனாபதிகளையும் அளவிறந்த சேனைகளையும் நரகாசுரனையும் கொன்று, ஆன்மாக்களது துயரத்தை மாற்றி உலகைக்காத்தனர்.

நரகாசுரன் இறக்கும்பொழுது தன் பூர்வக்கியானம்தோன்ற, விட்டுணுவை வணங்கி, "கடவுளே! அடியேன்செய்த பிழைகளைப் பொறுத்தருளும். இக்காலத்தில் உலகிலுள்ள ஆன்மாக்களுள் என் மரணத்தைக் குறித்து அப்பியங்க ஸ்நானஞ்செய்து கோடி வஸ்திரந் தரித்துத் தம் மிட்ட தேவதைகளைப் பூசித்துப் பலதானங்களை வழங்குவோரும், ஒரு பிராமணருக்காவது அப்பியங்கஸ்நானஞ்செய்வித்துத் தானம் வழங்குவோரும் அஸ்வமேத யாகபலனைப் பெறும்படி அருள்செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டபடி, விட்டுணு திருவருள்செய்தார். அதுமுதல் ஐப்பசிமாசக் கிருஷ்ணபக்ஷ திரயோதசி யிரவு விடியுங்காலத்துவரும் சதுர்த்தசி திதியில்முற்கூறியவாறு யாவரும் ஸ்நானம்; முதலியவற்றைச் செய்து தாம் தாம் விரும்பிய இட்டசித்திகளைப் பெறுகின்றார். ஆகலால் நீவிரும் அன்றைத்தினத்து இவ்வாறுசெய்து விட்டுணுவை வழிபடின் சுகம்பெறுவீர்கள்" எனச்சொல்லி விடைபெற்றுச் சென்றனர்.

இவ்வுண்மைகளை அறியாது தற்காலத்துள்ள நம்மவர், அப்பியங்க ஸ்நானமென்றதால் தம் தேக சுகத்தைக்கருதியதென்று ஒருவாறு அபத்தமாக விளங்கி, அக்கொண்டாட்டத்தின் பொருட்டு தம்மைக் கடன்காரராக்கி விலையுயர்ந்த சரிகைத் துப்பட்டாக்கள் பட்டுப்போர்வைகள் முதலியனவற்றை வாங்கித் தரிப்பதும் இன்னும்பிறவீண் செலவுகள் செய்வதுமாய் வீணாகின்றார்கள்.

ஜீவகாருணியம்.

ஜீவகாருணியமாவது மனைவி மக்கள், சுற்றத்தார், சிநேகிதர் முதலிய சம்பந்த முடையவர்கள்மேல் மாத்திரமல்லாமல் எல்லாச் சீவர்களிடத்தும் இயல்பாய் வைக்கும் தயையாம், இப்படிப்பட்ட சீவகாருணியம் சனங்களிடத்தில் நிரம்பி இருக்குமானால் ஒருவரையொருவர் துன்பஞ் செய்யமாட்டார்கள். ஒருவர்சொத்தை ஒருவர் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். ஒருவர்மனையாட்டியை ஒருவர்கைதீண்டவுமாட்டார்கள். ஒருவர் இராச்சியத்தை ஒருவர் அபகரிக்கமாட்டார்கள். தேசத்தில் சண்டைசச்சரவுகள் நடவா. எங்கும் சமாதானம் நிலைபெற்றிருக்கும். இராசாக்கள் சனங்களைப் பட்சமாக ஆதரிப்பார்கள். சனங்கள் மனம்வருந்த அளவுகடந்த வரிவிதித்துத் துன்பஞ்செய்யமாட்டார்கள். இராசாங்க உத்தியோகத்தரும் நடுவுநிலைமையா யிருந்து சட்டப்படி நீதி செலுத்துவார்கள். குடிகள் ஒருவரையொருவர் நேசித்து அன்புபாராட்டிக் குதூகலமா யிருப்பார்கள். எந்தச்சீவன்களும் கொல்லப்படமாட்டா. சீவகாருணியம் இல்லாதவர் உண்மையாக எவ்வித சற்கருத்தியங்களும் செய்யார். சீவகாருணியம் சிறந்த தருமங்களெல்லாவற்றிலும் சிறந்தது. ஆதலால்தான் "அஹிம்சாபரமோதர்ம" ௭

ன்று வேத சாஸ்திரங்கள் கூறுகின்றன.

பிரத்தியக்ஷத்தினாலும் அநுமானத்தினாலும் வேத சாத்திரங்களினாலும், யுத்தியினாலும் ஆராயினும் ஆன்மாக்கள் உய்வதற்கு முக்கிய சாதனமாயிருப்பது ஜீவகாருண்ணியமே. செல்வங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்த செல்வம் ஜீவகாருண்ணியம் என்னுஞ் செல்வமாம் இது அறிவிற் சிறந்த மேலோரிடத்துள்ளது. இழிதொழிற்றமற்றைப்பொருள்முதலிய செல்வங்களோ இழிந்தார்பாலும் இருக்கக் காண்கின்றோம். பொருளில்லாதார்க்கு இவ்வுலக இன்பம் எப்படியில்லையோ அப்படியே சிவ காருண்ணியம் இல்லாதார்க்கு மோக்ஷ இன்பம் இல்லையாம்.

சிவ காருண்ணியம் இல்லாதவர்கள் தங்களைப் பார்க்கிலும் வலியுள்ளவர்களிடத்துத் தாங்கள் அகப்பட்டுக்கொண்டு அவர்களால் துன்பப்படுவதை நினைக்கவேண்டும். நினைப்பார்களாயின் தங்களிலும் மெலிந்தவர்களுக்குத் தீங்கு செய்ய ஒருபோதும் கருதவும்மாட்டார்கள். பிற வுயிர்களுக்கு வருந் துன்பம் தமக்கு வருவதுபோலெண்ணிப் பிறவுயிர்களைப் பாதுகாவாவிடின் எவ்வளவு ஞானநூல்களைக் கற்றும் ஆன்மாக்களுடைய நிலைமையினை உள்ளது உள்ளவாறு அறிந்தும் பயனில்லை. இது செய்தால் உயிர்களுக்குத் தீங்குண்டாமென்று பிரத்தியக்ஷத்தினாலாவது அநுமானத்தினாலாவது அறிந்தபின், அதைப் பிறிதோருயிருக்குச் செய்தலாகாது. இப்பிறப்பில் யார் துன்பத்தை யனுபவிக்கின்றார்களோ அவர்கள் முன் சென்மங்களில் பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்தவர்களென்று நினைத்தல் வேண்டும்.

தருமங்களெல்லாவற்றுள்ளும் தனக்கு வேறே ஒன்று மிணையில்லாமல் தனக்குத்தானே இணையாயுள்ளது ஓர் உயிரையுங் கொல்லாமையாம். அந்தக் கொல்லாமையான தருமம் ஜீவகாருண்ணியமில்லாமல் வாராது. சிவகாருண்ணியம் இல்லாதவர் எவ்வளவு வைதிக வேடங்கள் தரிக்கினும் பயனடைய மாட்டார்கள். நன்மையடைய வேண்டுமென்று கருதுவோர் சிவகாருண்ணியமென்னும் உத்தமவிரதத்தை இடைவிடாது அனுசரித்தல் வேண்டும், வேதத்தில் சிறந்த தருமமாகச் சொல்லப்பட்ட சிவகாருண்ணியம் ஒன்றிருக்குமாயின், அவர்களிடத்தில் எல்லா நற்குணங்களுமபிவிருத்தியாம், வஸ்திரத்தில் சாயம் தோய்க்கவேண்டுமானால் அதிலுள்ள அழுக்கையெடுத்துவிட்டு எப்படிச் சாயம் தோய்க்கின்றாரோ அப்படியே மனமென்னும் வஸ்திரத்தில் தீய குணங்களென்னு மழுக்கை எடுத்துவிட்டு, சிவகாருண்ணிய மென்னும சாயத்தைத் தோய்க்கவேண்டும. முத்தி பெறுதற்குச் சாதனமாக விதிக்கப்பட்ட விரதங்களுள் முதன்மையான விரதம் சிவகாருண்ணியமாம். இன்றிருப்பது நாளையிருக்குமென்றெண்ணுதற்கு இடமில்லாநிலையற்ற இவ்வுடலத்தை யோம்புதற் பொருட்டுச் சற்று மிரக்கமில்லாமல் பிறவுயிர்கள் வருந்தத் துன்பஞ் செய்து நெடுங்காலம் நரகத்துன்பத்திலழுந்தாமல், எல்லாச்சிவன்களும இன்புற இதமே செய்வதோடு அவ்வுயிர்களுக்குத் தெய்விகத்தினாலேனும பிறவுயிர்களாலேனும துன்பமுண்டான விடத்துத் தங்களால் ஆனவரையில் தடுத்துக் காக்கவும் வேண்டும.

சிவ காருண்ணியம இல்லாவிடில் ஈசுரபக்தி யுண்டாகாது. உண்டாகாதாகவே ஆன்மஞானமுண்டாகாது. ஆன்மஞானமுண்டாகாவிடத்துப் பரமஞானமுண்டாகாது. அதுஉண்டாகாதாகவே முத்திபெறுதல் இல்லையாம.

"சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா — செய்யாமை மாசற்றார் கோள்.",

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்—மாணா செய்யாமை தலை."

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்—பூரியார் கண்ணு முள.

அன்பர்களே!

இவ்வாறு எல்லா நன்மைகளுக்குங் காரணமாயுள்ள சிவகாருண்ணியத்தைப் பேணி நடப்பீரேல் இருமை இன்பங்களையும் தப்பாது பெறுவீர்கள்.

கொண்டாட்ட சபை.

எமது பாலசந்திரனின் ஜெனனாளை எம்மிஷ்டர்களோடு கலந்து மகிழ்ந்து கொண்டாடக் கடைமைப் பட்டேமாதலால், அன்றுஎம்மால் ஓர் கொண்டாட்டசபை கூட்டப்பட்டது. பாலசந்திரனின உதயத்தைஅறிந்து களிகூர்ந்து அத்தருணத்தில் வந்துகூடினோர்பலர். எம்சமயாசார சாதியாசாரக் கொள்கைப்படி, அவர்கள் வரவை இனபுடனேற்று இயன்றவரையில் உபசரித்தோம். பின்பு பாலசந்திரனை யாம்வெளிப் படுத்தத்துணிந்த நோக்கத்தையும், பத்திரிகைகளாலெய்தும் பயனையும், அப்பத்திரிகைகளை நடத்துதற்குப் பொருளே விசேஷதுணையெனபதையும் விளக்கி, பாலசந்திரன முதலாம் இலக்கப்பிரிதியும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டது.

அப்பத்திர புத்திரனை எம் நண்பர்கள் அனபோடுஏற்று மனங்களி கூர்ந்தனர். இங்கே தமிழ்ப் பத்திரிகைகள்பல தொடங்கி நடைபெறு தொழிந்தமை போதிய ஆதரவை யில்லாமையினாலெனபதையும், விசேஷமாக இச்செல்வநகரில் ஓர்பத்திரிகை எம்மனோர்க்கு அத்தியாவசியகம் வேண்டற்பாலது எனபதையும் செவ்வனே உணர்ந்த நண்பர்சிலர், எம்பத்திரிகை விருத்தியெய்தும் பொருட்டுப் பினவருமாறு பொருளுபகரித்தனர்:-

ஸ்ரீ கா,கணபதிப்பிள்ளை	ரூபா	50—00
,, வ. கதிரவேற்பிள்ளை	,,	30—00
,, கண. கோபாலுபிள்ளை	,,	20—00
,, சி. சண்முகம்பிள்ளை வைத்தியர்	,,	20—00
,, ந. பொன்னையாபிள்ளை	,,	15—00
,, சு. கனகசபைப்பிள்ளை	,,	15—00
,, ம. பொன்னையாபிள்ளை	,,	10—09
,, ம. வேலுப்பிள்ளை		10—00
மு. க.த.சின்னக்குட்டியாபிள்ளை		10—00
,, வீ. ச. கந்தையாபிள்ளை		10—00
,, வே, மு, கந்தையா பிள்ளை		10—00
,, வீ, சங்கரப்பிள்ளை		10—00
,, வே. சி. மாணிக்கம்பிள்ளை		7—50
,, க. சு. கந்தையாபிள்ளை		5—00
,, சி. வ. சி. கைலாசம்பிள்ளை		5—00
,, க. சபாரத்தினம்பிள்ளை வைத்தியர்		5—00
,, த. கந்தையாபிள்ளை		5—00
;, சி. முத்து		5—00
,, மு. கந்தையாபிள்ளை		5—00
,, சு. மனுவற்பிள்ளை		5—00
,, மு. சி. இராசையாபிள்ளை		5—00
,, ச. ஞானப்பிரகாசம் பிள்ளை		5—00
,, க. நமசிவாயம்பிள்ளை		5—00
,, க. வைத்தியலிங்கம்பிள்ளை		5—00
,, வே. சி. க. முத்தையாபிள்ளை		5—00
,, ம. வீ. சுப்பையாபிள்ளை		3—00
,, சி. வேலுப்பிள்ளை		3—00
,, மு. வே. மு. வேலுப்பிள்ளை		3—00
,, சி. கந்தையாபிள்ளை		2—50
,, அ. பொன்னு		2—50
,, சு. சோமசுந்தரம்பிள்ளை		2—50
,, சி. சின்னத்தம்பியா பிள்ளை		2—50
,, நா. க. ஐயாத்துரைப் பிள்ளை		2—00
,, அ. சி. செல்லத்துரைப்பிள்ளை		2—00
,, வே. தம்பா பிள்ளை		2—00
,, வே. ச. முருகேசு		2—00
,, க. முத்தையா பிள்ளை		2—00
,, வே. தி. சுப்பையாபிள்ளை		1—00

இவ்வாறு முன்வந்து எம் பத்திரிகையை அபிமானித்துப் பொருளீய்ந்த அந் நண்பர்களுடைய தண்ணளி எம்மால் என்றும்பாராட்டத்தக்கது.

எம்மிடத்தே சிறிதும் கடமைப்பாடில்லாது எம்முயற்சியின் விருத்தியொன்றையே பெரிதும் கருதி உலோபமின்றிப் பொருள் கொடுத்த ஸ்ரீ கணபதிப்பிள்ளைமுதலிய சில நண்பர்களுக்கு நாம் பெரிதும கடமைப்பட்டேம்.

இனி இவ்வாறு எமது ஏனைய நண்பர்களும் பத்திரிகாபிமானிகளும் தங்கள் தங்களாலியன்ற பொருட் சகாயஞ்செய்தும், பத்திரிகைக் கிரயத்தைக் கொடுத்தும் எம்மை ஊக்கப்படுத்துவரேல் அவர் தமக்கும் நாம் வந்தனமளித்து அவர நன்றியை யென்றும் பாராட்டி இப்பத்திரிகையைச் சோர்வின்றி நடத்திவருவேம்.

எம்மிஷ்டர்கள் மேலும் மேலும் நல்விருத்தியெய்தவும் எம்முயற்சி இடையூறின்றிப் பலித்துப் பாலசந்திரன் இந்நிலவுலகிற் பரவும்எல்லாம்வல்ல இறைவர் திருவருள் சுரக்குமாறு அவர் பொன்னடிகளைப் போற்றிசெய்கின்றேம்.

எமது பத்திரிகை.

எமது பாலசந்திரனை யேற்று, பிரதிபுபகாரமாகத் தங்கள்பத்திரிகைகளை எமக்கனுப்பிவரும் 'இஸ்லாமமித்திரன்' 'திராவிடமித்திரன்' என்னும் இருபத்திராதிபர்களுக்கும் எம் வந்தனங் கூறுகின்றேம்.

ஸ்ரீமான் வே. சங்கரப்பிள்ளை அவர்கள்

கொழும்பிலே நெடுங்காலம் பிரபலவர்த்தகம்நடாத்திப் பெருநிதி தேடிய இவர், சென்ற புரட்டாதிமாசம் தேகவியோகமெய்திய செய்தி யாவருமறிவர். இவரைப்போலவே பிரபலவர்த்தகம் நடத்திப் பெருங்கீர்த்திவாய்ந்த ஸ்ரீமானர் முத்ததம்பிப்பிள்ளை, சின்னட்டிப்பிள்ளை, பண்டாரம்பிள்ளை என்பார் இவர்க்குச்சகோதரர்கள், கலியுகவரதராகிய சுப்பிரமணியப் பெருமான் நல்லைநகரில் சூரசம்மாரம் முடித்தபின், அப்பெருமானுக்கு அனுபிஷேகம்நடத்திவந்த ருகதாசர். கொழும்பிலே வர்த்தகம் நடத்தும் யாழ்ப்பாண வர்த்தகர் எவருக்காயினும் சொந்தக் கட்டடமாகக் கடைகளில்லை. யாவரும் வாடகைக்குரிய இடங்களிலேயே தம்தொழிலைநடாத்தி வருகின்றனர். இக்கனவான் ஒருவருக்கே இங்கே சொந்தகட்டடமுள்ளது.

இவருடைய அந்தியேட்டி சென்றவியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலே மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்று இங்கும் இவருடைய பேரனாகிய ஸ்ரீ த. மாணிக்கம்பிள்ளை அவர்கள் தம்மிட்டராயுள்ள நாற்பதுபேருக்கு விருந்தளித்து இப்பிரபுவை நினைவுகூரச் செய்தனர். இப்பிரபுவின்மேல் வட்டுநகர், ப்ரம்மஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர், ஸ்ரீ சி. மாணிக்கத்தியாகராச பண்டிதர், ஸ்ரீ ஆ. வேலாயுத சோதிடர் ஆகிய மூவரும் சொல்லிய சரமகவிதைகள் அச்சிட்டு எல்லாருக்கும் கொடுக்கப்பட்டன.

Local and General.

சுதேச வர்த்தமானம்.

கால நிலை:—இந் நாட்களில் மழை வருஷிக்கின்றது. தீபாவலிக்கடைகள் திறக்கப்பட்டன. ஆயினும் இவ்வர்த்தகமும் வருடந்தோறும் குறைந்தே வருகின்றது.

பொலிஸ் அதிகார எல்லை:—கொழும்பு நகரசங்கத்தார் தமது நகர எல்லையைக் கூட்டியிருப்பது எவர்க்குந் தெரியும். வெள்ளவத்தை, மீதோட்டமுல்லை, குப்பியாவத்தை, கணத்தை, திம்பிரிகஸ்யாய எனனு மிடங்களெல்லாம் புதிதாக நகர எல்லைக்குட் சேர்க்கப்பட்டன. இவ்விடங்கள் அடுத்த மாசந் தொடக்கம் பொலிஸ் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களாகும்.

விவாகம்:—சென்ற 22ந்திகதி யிரவு கண்டியில் பிரபல நியாய துரந்தரராகவும் நகரசங்கஅங்கத்தவராகவு மிருக்கும் ஸ்ரீ. வி. எம். சரவணமுத்து அவர்களுடைய மருகி திருவேங்கட வல்லி அம்மாளுக்கும் வண்ணார்பண்ணைவாசர் ஸ்ரீ. சிதம்பரநாதர் அவர்களுக்கும் மிகச் சிறப்பாக விவாகம் நடைபெற்றது. தம்பதிகள் இருவரும் நீடூழி வாழப் பெருமான் திருவருள் செய்க.

துணிகரமான களவு:--வெலிக்கடைப்பகுதியில் அடிக்கடி களவு போவது வழக்கமாக விருக்கின்றது. சென்ற செவ்வாய்க்கிழமை முஸ்லிம் நேசன பத்திராதிபருடைய வீட்டுள் சில திருடர் புகுந்து அங்குள்ள பொருள்கள் யாவற்றையும் திருடிச் சென்றனர்.

ஸ்ரீ. கா. தாமோதரம்பிள்ளை:—மட்டக்களப்பு மாகாண இஞ்சினீர் ஆபீசில் சிரேஷ்ட லிகிதராகவிருந்த இவர் கொழும்பு மாகாண இஞ்சினீர் ஆபீசில் சிரேட்ட லிகிதராக மாற்றப்பட்டு, இவ்வாரந் தொடக்கம் தமது கடமையைப் பார்த்து வருகின்றார். இங்கிருந்த ஸ்ரீ. சிவப்பிரகாச மெனபவர் மட்டக்களப்புக்கு மாற்றப் பட்டனர். ஸ்ரீ. தாமோதரம்பிள்ளை யெனபவர் நெடுங் காலம் பகிரங்க தெரு வேலைப் பகுதியில் நேர்மையாகவும் சாதுரியமாகவும் உத்தியோகம் நடத்திவரும் ஓர் உத்தமர்.

ஸ்ரீமத். சு. ஏரம்பையர் அவர்கள்:--தமது வித்தியாசாலைக் கட்டடத்திற்குப் பொருளுதவி பெறும்படி இங்கு வந்திருந்த இவர்கள், தேக அசௌக்கியத்தினால் யாழ்ப்பாணத்துக்குச் சென்றார்கள்.

பிரதம பரீக்ஷை:—இம்முறை நடத்தப்பட்ட லண்டன பிரதம பரீக்ஷையில் எம் தமிழ்ப் பிரதிநிதியாக விருந்து தேகவியோக மெய்திய ஸ்ரீமான. குமாரசுவாமி முதலியார் அவர்களின இரண்டாந்தாரபுத்திரன பொன்னம்பலமெனபவர் முதல்வகுப்பிற் சித்தியடைந்தனர்.

குழாய் சலம்:—வடபகுதியிலுள்ள பிரதான குழாயிற் பழுது கண்டிருப்பதால், அது திருத்தப்படும் வரையில் குழாய் சலம் இடைக்கிடை தடைப்படுமென விளம்பரம் செய்யப்பட்டிருக்கின்றது.

உத்தியோகத்தால் நிறுத்தப்படுதல்:--கல்முனையைச் சார்ந்த அக்கரைப் பற்றிலுள்ள தபாற்கந்தோர் உத்தியோகத்தர் ஏதோ மாறுபாடு செய் திருப்பதை யறிந்து தபாற்கந்தோர்ச் சிரேட்டர் அவரை வேலையால் நிறுத்தியிருக்கின்றார்.

ஜனனமரணம்:—இந்த மீ 22- தேதியோடு முடிந்த ஒருவாரத்தில் இந்நகரிற் சம்பவித்த ஜனனம் 98. மரணம் 101.

தப்பர்: —இதன விலை ஒனறரைப் பெனஸ் குறைந்துவிட்டது.

ஐந்துசத நாணயம்:—புதிய நிக்கில் நாணயம் வழங்கத்தொடங்கவே, இவ்வருடமுடிவோடு பழைய ஐந்துசதக்குற்றிகள் வழங்கப்படாவெனபது அரசாங்கபிரமாணம். இதனால் அங்கங்குள்ள கச்சேரிகளில் அக்குற்றிகள் மாற்றப்படுகின்றன. இங்ஙனம் மாற்றப்படும் பழய நாணயங்கள் இங்குள்ள அரசாங்க பொக்கிஷ சாலைக் கனுப்பப்படுகின்றன. இவ்வாறு அனுப்பப்பட்ட நாணயங்களுள் யாழ்ப்பாணப் பகுதியால் அனுப்பப்பட்டவைகளே மிகத்தொகைகொண்டன

தேசாதிபதியவர்கள் குமாரர்.—கப்டின் சி. எச். எம். மெக்கலம் என்பவர் நம்தேசாதிபதியவர்கள் குமாரர். இவர் சிங்கப்பூர்ப் பகுதியில் படைவகுப்பைச்சேர்ந்திருந்தவர். அங்கே தம் உத்தியோக காலவெல்லையை முடித்து இங்கிலாந்தில் ஓர் படைவகுப்பில் சேரும் நோக்கமாகச் செல்லும் வழியில், இரண்டொரு நாளையில் இவ்விடம்வந்து போவார்:

மிஸ்றர்ஹென்றி—மன்னார்ப்புகைரதப்பாதை வேலைப்பகுதி உதவி இஞ்சினீராக இருந்த இவர், அடிக்கடி நோயாற் பீடிக்கப்பட்டு வந்தமையால் உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்துவிட்டார்.

சாராயம்:—சென்றசெவ்வாய்க்கிழமை இலங்கை அரசினர்பொருட்டு 95 பீப்பா சாராயமும், கண்டி கொழும்பிலுள்ள குதங்களுக்கு 222 பீப்பா சாராயமும் இந்தியாவிலிருந்துகொண்டு வந்திறக்கப்பட்டது. இங்கே சாராயத்துக்கு விலைகூடியதால் இரேருச் சுங்கமில்லாமல் இந்தியாவிலிருந்து அழைப்பித்துக் கொள்ளும்படி குத்தகைக்காரருக்கு அரசினர் அநுமதிகொடுத்திருப்பதால், அவர்கள் இவ்வாறு அழைப்பிக்கின்றார்கள்.

இளவரசர்:—ஜர்மனிய இளவரசரும் பரிசனங்களும் அடுத்தமாசம் 19 உ இங்கே வருவார்களெனபது மாற்றப்பட்டது. அவர்கள் 20 உ இத்துறைமுகத்திலிறங்குவார்கள். 21ந்தேதி இராணிமாளிகையிலும் நூதனசாலையிலும் அவர்களுக்கு உபசரணை நடக்கும்.

வைசூரி;—சென்ற திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் இருவர் இந்நோயாற் பீடிக்கப்பட்டனரென அறிகின்றோம்.

இங்குள்ள சிரேட்ட வைத்தியசாலையில் ஓர் நோயாளிக்கு இந்நோய் காணப்பட, அவன் அம்மை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டான், பொறலைப்பகுதியிலும் இந்நோய் தொடங்கியிருப்பதாக அறிகின்றோம்.

மருதானைப்பாலம்.—இப்பாலத்தை விசாலப்படுத்தி வருகின்றார்கள். புகைரதஸ்தானப் பக்கத்துள்ள பகுதி வேலை முடிவாயிற்று. தெனபுறவேலை தொடங்கப்பட்டிருக்கிறது.

க்ஷயரோக நிவாரணம்:—இந்நோய் இங்கே வரவர அதிகரிப்பதால் அதைப் பரிகரிக்கும்வழியை அரசினர் தேடிவருகின்றனர். எமது எட்வேட் அரசர் அவர்கள் ஞாபகசின்னமாக இந்நோயைப் பரிகரிக்கும் சிறந்த வைத்தியசாலையொன்று திறந்தாலோ எனபது சில தக்கார் கருத்து.

ஸ்ரீ எஸ். சோமசுந்தரம்:—இவர் சுப்பிறிங்கோட்டுத் தரணிமாருள் ஒருவராகச் சேர்க்கப்பட்டனர்.

கானவேலை:— கொழும்பில் நடைபெறும் கானவேலையின்பொருட்டு இதுவரையில் 6776572 ரூபா செலவிடப்பட்டது. இதில் 112229 ரூபா சென்ற ஆவணிமாசத்திற் செலவாயிற்று. இம்மாசத்தில் 2927 வேலைக்காரர் வேலைசெய்திருக்கின்றார்கள்.

தெருப்புழுதி:—இந்நகரிலுள்ள தெருக்களிற் புழுதிகிளம்பிச் சனங்களைத் துன்பப்படுத்தாமல் தடுப்பதற்கு மீண்டும் 5000 ரூபா நகரசங்க மதிப்பிற் சேர்க்கப்பட்டது.

மகாமுதலியார்:—இக்கனவான் தமது புத்திரரோடு சென்ற வியாழக்கிழமை சீமையிலிருந்து இவ்விடம் வந்து சேர்ந்தனர். துறைமுகத்தில் தக்கார் பலர் கூடிநின்று அவர் நல்வரவை உபசரணையோடு ஏற்றனர். இவருடைய மாளிகையிலும் நானுவகுப்பினரும் கூடிக்கொண்டாடினர்.

ரூபா நாணயம்:—இங்குள்ள சென்னைக்கினை வங்கிச்சாலைக்கு சென்றவியாழக்கிழமை 5 இலட்சருபா கொண்டுவரப்பட்டது.

விடுதலைநாள்:—இம்மாசம் 31ந்திகதி தீபாவலிப்பண்டிகைக்காக வங்கிச்சாலைகள் மூடப்படும்.

பிறின்ஸ்வீதி:—இன்று நடு ராத்திரி தொடக்கம் அடுத்தாள் நடு இரவுவரையும் இத்தெருவால் வண்டி முதலியன செல்லப்படாதென அரசாங்கத்தார் விளம்பரஞ் செய்திருக்கின்றனர்,

வண்டியால் நேர்ந்த மரணம்:—சம்மாங்கோட்டுப் பள்ளிவாசலை யாவரும் அதிசயிக்கும்படி பல நூதன வேலைகள் இயற்றிக் கட்டிமுடித்தவராகிய மிஸ்றர் எச். எல். சாப்புலெவ்வை என்பவர், சென்ற ஞாயிற்றுக் கிழமை பகல் றிக்ஷோ வண்டியில் இரண்டாம் குறுக்குத் தெருவிற் செல்லும்போது அதிவேகமாக ஒருவன் தனது மாட்டுவண்டியையோட்டிச்செல்ல இவ்விருவண்டிகளும் ஒன்றோடொன்று மோதின. இதனால் அக் கைவண்டி புரளக் குதித்த சாப்புலெவ்வை கீழே விழுந்து மாட்டுவண்டியுள் அகப்பட்டனர். இவருக்கு மேலே அவ்வண்டியேறிச் சென்றும் அவர் உபத்திரவமில்லாதவர்போல உடனே எழுந்து வீட்டுக்குச் சென்றனர். வரவரச் சுவாசப் பையில் நோவதிகரித்து, வைத்தியர் ஆற்றலுக்கு மிஞ்ச, அன்றிரவு இறந்தனர். இவர் சிற்பசாத்திரத்தில் அதிநிபுணரென்பதை மேற்குறித்த பள்ளிவாசலே காட்டும். பள்ளிவாசல் முகாமைக்காரர் இவருடைய மரணக்கிரியைகளின்பொருட்டு 300 ரூபா நன்கொடை புரிந்தனர். இன்னும் அவருடைய மனைவி மக்களுக்குத் தக்க உதவி செய்வதாக வாக்களித்திருக்கின்றார்களாம்.

* * *

ஸ்ரீமான். பொ. இராமநாதன்:—கண்டியில் பிரபல நியாயதுரந்தரர் உத்தியோகத்தர் பலர் கேள்விக்கிணங்க நேற்றிரவு இக்கனவானால் அங்கே 'பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படுவோருக்கும்அவர்களைத்தெரிவுசெய்வோருக்கும்உரிய கடமைகள்'என்னும் விஷயத்தைப் பற்றி ஓர் சிறந்த உபந்நியாசஞ் செய்யப்பட்டது.

அபினால்நேர்ந்த மற்றொரு மரணம்:-சேதாவத்தையில் ஒருவன் இக்காலப் புதிய சட்டத்தின பின தான வழக்கமாகத் தினனும் பிரமாணப்படி அபின பெறக்கூடாமையால், தளர் வடைந்து இரண்டொருநாள் அபின தினபதை நிறுத்தினன, அசௌக்கியம அதிகரித்தமையினால் தனனிடமிருந்த கொஞ்ச அபினைத் தினறு கள்ளையும் பருகினன. இதனால் குடல் எரிவு முதலியனவுண்டாகி வைத்தியர் பலர் தெண்டித்தும் இறுதியில் மரணமடைந்தனன. வழக்கப்படி அவன அபின தினறுவராத காரணமே அவனுடைய மரணத்துக்கு ஏது வெனபது வைத்தியர் அபிப்பிராயம்.

ஸ்ரீ வே. சங்கரப்பிள்ளை புறேக்டர்

இந்நகருக்கு எமது பத்திரிகை அனுப்பப்பட்டபோது, தாம் அளவிறந்த பத்திரிகைகளைப் பெறுவதாகவும் அவற்றை வாசிக்கத் தமக்கு நேரமில்

லையென்றுங்கூறி எம் பத்திரிகையைத் திருப்பிவிட்டார். நாம் கைக்கொண்ட இவ்வரிய முயற்சியில் ஊக்கத் தைரியங்கொடாது இவர் இவ்வாறு செய்தமை இவருடைய பெருமைக்கு ஏற்றவொன்றோ என்பதைப் பத்திராபிமானிகள் சிந்திக்கக் கடவர். இங்கொழும்பிலுள்ள கனவான்கள் யாவரும் எம் பத்திரிகையை ஏற்றுக்கொண்டனர். இவர் ஒருவரே தமக்குப் பத்திரிகை வாசிக்க நேரமில்லையென்றனர். வேறு பத்திரிகைகளைப் பெற்றுத் தாம் அவற்றை வாசியாதே கிரயங்களைக் கொடுக்குமிவர், எம்பத்திரிகையையும் பொதுப் பிரயோசனங் கருதியேனும் கையேற்று அதன் கிரயத்தைக் கொடுப்பின் அது எவ்வளவு உபகாரமாகும். வாசிக்கப்படாது ஒதுக்கப்படும் அப்பத்திரிகைகள் இவருக்கு என்ன பிரயோசனத்தைக் கொடுக்கின்றனவோ? தாகர் தம் கொள்கையைச் சற்றே சிந்திக்கக்கடவர்.

யாழ்ப்பாணம்.

மழை:—சென்ற 18-ந்உ ஓர் சிறு பாட்டம் மழை வருஷித்தது. இதனால் வாட்டமுற்ற பயிர்கள் சற்றே தலை நிமிர்ந்தன. இனி அடுத்து இடைக்கிடை மழை பெய்யுமாயின் வேளாண்மை நயப்படும்.

ஏசண்டர்:—மிஸ்றர் பிறீமன் துரை அவர்கள் கச்சேரி முதலியாரோடு தீவு பக்கங்களைச் சுற்றோட்டஞ் செய்து மீட்டும் திரும்பிவிட்டனர்.

வழக்கு:—வண்ணார்பண்ணை யிலுள்ள ஒருவன் நொண்டிமாட்டை வண்டியிற்பூட்டிச் சவாரிசெய்ததனால் ஒரு ரூபா தண்டம் இறுத்தனன்.

புகையிலை:—திருவாங்கூர் அரசாங்கத்தார் புகையிலைத் தீர்வையைக் கூட்டியதால் அங்கு புகையிலை ஏற்றுமதி செய்யப்படாதிருந்தது. இலங்கை அரசினரின் தன்னளியால் அத் தீர்வை முன்போலக் குறைக்கப்பட்டது. இதன்பின முதன்முறையாக 5000 சிப்பம் புகையிலை சென்ற 20-ந்உ ஏற்றுமதி செய்யப்பட்டது.

கொலை;—நெடுந்தீவில் ஒரு பள்ளன் கொலை செய்யப் பட்டான. அங்குள்ள விதானையோடு அறுவர் இக்குற்றத்தி லகப்பட்டிருக்கிறார்கள்.

முல்லைத் தீவு.

காலநிலை;—மழை நன்றாய் வருஷிக்கின்றது. கமக்காரர் கம வேலைகளில் அதிக முயற்சியாயிருக்கிறார்கள்.

அருந் தப்பு:—இங்கிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு தோட்டத்தில் கந்தப்பர் என்று மொருவர் மேல்விசாரணைக்கர்த்தராக விருக்கின்றார். சென்ற வாரத்தில் ஒருநாளிரவு 12 மணியளவில் மாடுகள் சத்தமிட்டன. அவர் விழித்து பட்டியில் இவை முறைகேடாகக் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்று எண்ணி, அங்கு சென்று ஒரு கன்றுக்குட்டியை வெளியே கொண்டுவரத் தெண்டித்தார். இக்கன்றைப் புலியொன்று ஏமே புரட்டிப் பிடித்திருப்பது அவருக்குத் தெரியாமல் மேலே கிடப்பதும் கன்றுக்குட்டியேயென நினைத்து அதன கழுத்திற் கயிற்றைத் தடவும்போது அதைப் புலியென்றறிந்து, தெய்வச் செயலால் தீங்கொன்றுமின்றி யோட்டம் பிடித்தனர். புலி கன்றுடன் ஓடி மறைந்தது. வினைப்பயனின் விசேஷமிதுவே.

வழக்கு.

கள்ளக் கையெழுத்திடுதல்:—சென்ற ஜனவரி மாசத்தில் யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவர் கொழும்பு வர்த்தகரொருவருக்குத் தவால்மார்க்கமாக அனுப்பிய 125 செக் ஒன்று, அனுப்பப்பட்டவரிடத்துச்சேராமல், இங்கே தவாற் கந்தோரில் கிளார்க்கு வேலைபார்க்கும் பிரௌனிஸ், அருட்டுவியாபாரி 'அந்தோனிப்பிள்ளை எனனும் இருவரிடத்து அகப்பட்டது, இதை அவ்விருவரும் சின்னத்தம்பி என்பவரிடம் கொண்டுபோய்ப் பணங்கேட்க, அவர் அங்கே பண மில்லாமையால் வேறொரு வர்த்தகரிடம் அனுப்பினர். அவ்வர்த்தகர் சின்னத்தம்பியின தலைவராகிய சங்கரப்பிள்ளை கையெழுத்திட்டால் பணம் தருவதாகச் சொல்ல, அவ்விருவரும் பின்னும் சின்னத்தம்பியிடம் போய்க் காரியத்தைத் தெரிவிக்க, அவர் யாழ்ப்பாணம் போயிருந்த சங்கரப்பிள்ளையுடைய கையெழுத்தைத் தாமே வைத்துக்கொடுத்தனர், இதனால் பொலிசுக்கோட்டில் அவரில் வழக்குக் கொண்டுவரப்பட்டது, நீதிபதி இவரைக் குற்றப்படுத்திச் சுப்பிறீங்கோட்டுக்குப் பாரப்படுத்தினர். இப்பொழுது இவ்வழக்கு அக்கோட்டில் விசாரிக்கப்பட்டபோது சின்னத்தம்பி யென்பவர் நல்லகருத்தோடு தமது எசமானர் கையெழுத்தை வைத்ததாகவும், தம் எசமானர் இல்லாவிடத்து அவர் கையெழுத்தைத்தாமிடுதல் வழக்க'மெனறும் ருசுப்படுத்தியதால் யூரிமார் அவரை விடுதலைசெய்தனர்.

களவு:—அறபியாவிலிருந்துயாதோர் தருமவிஷயமாகப் பொருள் சேர்க்கும் பொருட்டு ஒரு மவுலானா இங்குவந்து காலிக்குச்சென்றார். அங்கே வெனெஸ்ட் மாக் எனனும் 16 வயதுடைய பரங்கிவாலிபன் அவரையண்டி தான் இஸ்லாம்மார்க்கத்தைக் கைக்கொள்வதாக வாக்களித்து அவரின் ஜோப் பணிவிடைக்காரனானான். இவ்விருவரும் சென்றவாரம் களுத்துறைக்கு வந்து அங்கே ஒரு பள்ளிவாசலிற் றங்கினர். அப்பரங்கி அன்றிரவே அவரிடத்திருந்த 632 ரூபா பணத்தைத் திருடிக்கொண்டு கொழும்புக்கு வந்தனன. இங்கே பிடிக்கப்பட்டு அடைக்கப்பட்டிருக்கின்றான.

பிரயாணி தண்டம்பெறல்:—கொம்பனித்தெருவிலிருந்து வெள்ளவத்தைக்குப் புகைரதத்தில் மூன்றாம்வகுப்புச்சீட்டுப்பெற்று இரண்டாம் வகுப்பில் பிரயாணம்செய்த ஒருவர் ரூபா 5-50 அபராத மிறுத்தனர்,

கொலை வழக்கு:—கண்டிக் கடுத்த மகாயாவ என்ற இடத்தில் சிலவாரங்களுக்குமுன் ஒரு சோனகன் கொலை செய்யப் பட்டனன். விசாரணையில் குற்றவாளிகள் மூவரில் இருவரை நீக்கி ஒருவனை மாத்திரம் குற்றப்படுத்தி, பொலிஸ் நீதிபதி விசாரணைப்புத்தகத்தை அற்றோணி ஜனராலுக் கனுப்பியிருந்தார். இப்பொழுது அற்றோணிஜனராலுடைய கட்டளைப்படி நீக்கப்பட்ட இருவரும் பிடிக்கப்பட்டு விசாரணை நடக்கின்றது.

சனங்கள் பேசிக்கொள்வதென்ன?

தேசாதிபதி யவர்கள் தம் குமாரரைக் காணும்போது மனமகிழ்ச்சி யடைவார்கள். அவர், தம் புத்திரர் படைவகுப்பிலிருத்தலை நினைப்பின் அம்மகிழ்ச்சி எவ்வாறாகுமெனப் படைவகுப்பி லுள்ளார் பகருகின்றனர்.

கல்வி கற்றுத் தேறிய சுதேசிகள் பொருட்டு ஒருவரைத்தம் பிரதிநிதியாகச் சனங்கள் தெரிவு செய்துகொள்ளும்படி புது விதி பிறந்திருக்கின்றது. இவ்விடத்தைப் பெற முன்வந்தார் இராமநாதன பர்ணாந்து எனனுமிரு கனவானகளே. ஆற்றலு மறிவும் அடக்கமும அநுபவமுமுடையவர் இராமநாதனாதலால்அவரையே உலகம் நாடுமெனறே நல்லோர் நவிலுகின்றனர்.

பாலசந்திரனின அழைப்புப் பத்திரத்தை அங்கீகரித்துக் குககாச அச்சியந்திரசாலையிற் கூடிய நண்பருள் அச்சந்திரன விருத்தியைக் குறித்து நன்கொடை புரிந்த நல்லோர் கீர்த்திநாடெங்கும் பரவி நிலவுகின்றதெனக் காரிய மறிந்தோர் கழறுகின்றனர்.

கதிரேசன கோவில் மகமைப்பணத்தைக் கொடாதிருத்தல் புண்ணியமாகுமோவெனவும், பிறர்பொருட்டோ கதிரேசனபொருட்டோ அது முன்னுட்கொடுத்துவரப்பட்ட தெனவும் மூதறிவுடையார் முறையிடுகின்றனர்.

இராமநாதன் வயதின முதிர்ந்தவராதலால், பொதுவிஷயங்களிற் றலையிட்டு வேலைசெய்யத் தகுதியற்றவரெனப் போலிப் பத்திரிகை யொன்று புலம்புகின்றது. வயதின மிக முதிர்ந்தாரே இராசதந்திரிக பொதுஜன நலங்களிற் றலையிடுதல் இங்கிலாந்தின வழக்கமென இராச்சிய பரிபாலன முறையறிந்த சற்குணர் சாற்றுகின்றனர்.

பாலசந்திரன் தோற்றியது நமக்குப் பெரும் பயனளித்தற் காதலால் நாமொவ்வொருவரும் முன்வந்து அதன் விருத்தியை, வாக்கினாலும் பொருட்சகாயத்தினாலும் நிலைப்படுத்தல் பெருங்கடனன்றோவென, கொண்டாட்டசபைக்குச் சென்றிருந்தார்.-சிலர் கூறினராம்.

பிரதிநிதி யொருவரைத் தேடும்முறையையும் பிற ஒழுங்குகளையும் ஊர்கடோறும் சென்று உபந்நியாசஞ்செய்துவரும் இராமநாதன் அவர்களுக்குள்ள ஆற்றல்தமக்கில்லாத மற்றொருவர்,அப்பிரதிநிதித்துவம் வகித்தலால் சனங்களடையும் பிரயோசனம் யாதோவெனப் பெரியோர் பலர் பேசுகின்றனர்.

கதிரேசன் கோவிற் பரிபாலகர்களோடு தாம் சேர்ந்தொழுகல் கூடாதாயினும், தாம் வழிபடும் கடவுளுக்குத் தம்மாற் செய்யவேண்டிய காணிக்கையாகும் மகமைப் பணத்தைத் தம்முட் சேர்த்து அவ்வாலயத்தை ஸ்திரப்படுத்தாதிருத்தல் உண்மைச் சமயிகளின உத்தமகுணமாகுமோ வென உத்தமர் பலர் உரைத்தனர்.

பெரும் பொருள் செலவிட்டுக் கல்விக்கழகமமைக்க முன் வந்தகனவானொருவர், சனங்களின் பொதுப் பிரயோசனம்கருதி வெளிப்படுத்திய "பாலசந்திரனைப்பாராதும் படியாதும் வருடசந்தாவொன்றையே கருதிய லோப குணத்தாற்போலும், பத்திரிகைபடிக்க நேரமில்லையென வாய்ச்சால வார்த்தை வழங்கிவிடுத்தனரென வழிச்சென்று கண்டார் சிலர் வசனித்தனர்.

பாலசந்திரனின கொண்டாட்ட சபைக்குவந்தும், அதனவிருத்தியை நாடி நன்கொடைபுரியாது சென்றவரும், சந்திரனின் அதிபரின் உறவினருமாகிய சிலர், தாமும் தக்க நன்கொடை புரிதல் கடனன்றோவென ஆலோசனையி லிருப்பதாக, நண்பர்கள்சிலர் நவின்றனர்.

Telegrams.

தந்தி வர்த்தமானம்

போட்சுக்கல்.

அல்வன்சோ அரசரும் இராணியும் வலனிக்காவுக்குச் சென்றபோது அவர்கள் அங்கே உள்ளக்களிப்போடு உபசரிக்கப்பட்டு யாவராலும் போற்றப்பட்டனர்.

வேலைக்காரர் தாம் இப்பொழுது பெறும் வேதனத்திலும்பார்க்க மூன்றிலொருபங்கு கூட்டித் தரும்படி கேட்கின்றார்கள். தேசாதிபதி, அவர்களுட் டலையாயினரைச் சந்தித்து முடிவு செய்யும்படி ஓர் ஆலோசனைச் சங்கம் நியமித்திருக்கின்றனர்.

இத்தேசத்துத் தபாற் கப்ப லொன்றுகேப்டவுனுக்குவடக்கே யுடைந்து நாசமாயிற்று. எழுபிரித்தானியர் மீட்கப்பட்டனர். ஏனையோர் இறந்தனர்,

ஏற்றுமதி செய்யும் வேலைக்காரர் எண்ணாயிரவர் நின்றுவிட்டார்கள், உணவுப் பதார்த்தங்கள் விறகு முதலியன கிடைக்காமையால் பட்டாளத்தவர்க்குள் குழப்ப முண்டாகி யிருக்கின்றது.

பேர்ஷியா.

இதைக்குறித்த விஷயங்களைக் குறித்து ஜர்மனி தலைபிடா தென்பதை யறிந்தபின், அவ்விராச்சிய பரிபாலன உத்தியோகஸ்தர் சாந்தமாக விருக்கின்றார்கள்.

பிரித்தானியர் இத் தேசத்தைப் பிரிக்கிறதற்கு முயற்சி செய்கின்றார்கள். அங்கே வசிக்கும் துருக்கியர் இச் செய்கையில் மனங் கொதித்து ஜர்மனிய சக்கரவர்த்தியாரை உதவி செய்யும்படி விண்ணப்பஞ் செய் திருக்கிறார்கள்.

பிரான்சு.

இத்தேச பிரசாதிபதி யவர்களையும, மந்திரிமார், பொலிஸ் தலைவர்களையும் சதிக்கொலை செய்வதாக அச்சுறுத்தி ஓர் விளம்பரத்தை வெளிப்படுத்தினோரைப் பிடிப்பதற்கேற்ற பிரயத்தனம் நடக்கின்றதென்று சொல்லப்படுகின்றது.

குழப்பக்காரரோடு சேராது கிரமமாக வேலை செய்து வந்தவர்களுக்கு மத்திய புகைரதப்பகுதியார் ஒரு லட்சம் பவுண் நன்கொடை கொடுத்தனர்.

ருஷிய சக்கரவர்த்தி ஜர்மனிய சக்கிரவர்த்தியை அடுத்த மாசம் 4-ந் தேதி பொட்ஸ்டம் என்ற இடத்தில் சந்திப்பார்.

பிந்திவந்த கடிதங்கள்.

வித்தியாபிவிருத்திப் பிரசங்கம்.

இப்பொழுது சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோவிலின் மேலை வீதியிலே வித்தியா பரிபாலனசபையாரால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருஞ் சைவ வித்தியாசாலையில் சென்ற 25ந்திகதி செவ்வாய்க்கிழமையிரவு திருவாங்கூரிலே உயர்ந்த உத்தியோகங்களி லிருந்து இப்போது உபகாரச் சம்பளம் பெறுபவ ராகிய ஸ்ரீமாந். தா. பொன்னம்பலபிள்ளை யவர்களால் ஒரு பிரசங்கஞ் செய்யப்பட்டது: அப்பொழுது நாலுதிசைகளிலு மிருந்து பிராமண குருமாரும், நியாயவாதிகளும், இலேககர்களும், சுதேச பத்திராசிரியத் தலைவர்களும், நொத்தாரிசுமார்களும், உபாத்தியாயர்களும், சிகிச்சகர்களும், பிறருமாகவுள்ள உத்தியோகத்தர்களும், வேளாண்மைச் செல்வர்களும்' பிறரும் வந்திருந்து பிரசங்க சபையைச் சிறப்பித்தார்கள்.

ஸ்ரீமாந். பொன்னம்பலபிள்ளையவர்கள் சிறுவர்களுக்கு அவசியந் தமிழ்க்கல்வி கற்பித்தல் வேண்டும் என்றும், அவைகளால் வருமநன்மைகள் இவை இவை என்றும், தமிழ்க்கல்வி முன்னோரால் நன்குபடிக்கப்பட்டு வந்தது என்றும், தமிழ்க்கல்வி படித்தலாலாகிய பயன இவை இவை எனறும் யாவர்மனத்திலும் பதியும்படி மிக விரித்துப் பிரசங்கித்தார்தார்கள்.

அப்பால் ஸ்ரீமத் ஆ. மு. சோமாஸ்கந்தபண்டாரவர்களும் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவரவர்களும், "கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றிச் சில சில குறிப்புரைகள் கூறினார்கள்.

இச்சபைக்கு கந்தரோடைவாசரும் சற்குணபூஷணரும் நியாயப்பிரதிநிதியும் ஆகிய, ஸ்ரீமான வி. எஸ். பொன்னம்பலபிள்ளையவர்களே அக்கிராசனாதிபதியாகவீற்றிருந்து பிரசாரகர்களைப் பிரேரித்து, பேசப்பட்டவிஷயங்களை அநுவதித்துத் தமிழ்ப்பாஷையின் 'அருமைபெருமைகளைத் தாமும் விரித்துப் பிரசங்கித்துச் சிறப்பாக முடித்தார்கள்.

முன்னும், பின்னும் தேவாரம்முதலிய அருட்பாக்கள் யாழ்மொலியோடு இசையுமாறு, ஸ்ரீ. திரு' சோமசுந்தரம்பிள்ளையவர்களால் எவர்களும் வியக்கும்படி ஓதப்பட்டன.

இங்ஙனம்

வ. மு. இரத்திநேசுவரையர்

உபாத்தியாயர், உடுவில்

வடமொழி, தென்மொழி.

வடமொழி தென் மொழி என்னும் பாஷைக ளிரண்டினும் மானுடர்களுக்கு அறிவினை விளக்கத் தக்க அளவிறந்த நூல்கள் செய்யப்பட்டுக் கிடக்கின்றன, இந்நூல்களைப் பரோபகாரங் கருதிச் செய்து வைத்துப் போன மகாசனங்களும் அத்திநூக புத்திமானகள். இந் நூல்களைப் படித்து வந்த மகாசனங்களும் அத்திநூக புத்திமான்கள், இவ்விரு பாஷைகளும் பாரத கண்டத்திலே, இப்பொழுதும் விசேடமாகப் படிக்கப்பட்டு வருகின்றன.

வடமொழி என்பது வேங்கட மலையின் வட பாகத்திலே வழங்கிய பெயர் சமஸ்கிருத பாஷை, தேவபாஷை, ஆரிய பாஷை, கீர்வாண பாஷை, வடசொல் என்பன வடமொழியின் பரியாய நாமங்களாகும். இந்நாமங்களின் பிரயோகங்கள் தென்மொழி நூல்களிலும் ஆங்காங்கு காணப்படுகின்றன.

தென்மொழி என்பது வேங்கடமலையின் தென்பாகத்திலே வழங்கிய காரணம்பற்றி வந்தபெயர். தெனமொழி எனபதில் தென்எனபது தெற்குத்திசையைக்குறித்து நின்ற ஒரு விகாரமொழி. மகா வித்துவானாகிய அரச கேசரியும் இரகுவமிசத்திலே "தென்றிசைத்தமிழானனிசெப்புகேன்" என்றார். கம்பநாட்டாழ்வாரும் "தென்சொற் கடந்தான்" என்று இராமாயணத்துக் கூறினர். இன்னும் பண்டைநூலாசிரியர் பலர் தென்மொழி என்பதற்குத் தென்றிசைக்கண் வழங்கும் மொழியெனறே கொண்டனர். இவைநிற்க,

தென்மொழி எனபதற்கு வேறு சிலர் "அழகிய பாஷை" என்று பொருள் கூறுவராயினர். இதுவும் பொருந்துமா? வடமொழி அழகிற் குறைவுபாடுடையதா? தெனமொழிக்கு விசேடமாக யாதாயினும் பண்டை யாசிரியர்களாற் கூறப்பட்ட அழகுகளுமுளவோ? தென்றிசை மொழி யெனனும் பொருளை மறுத்துரைப்பாராய் "தென்னாட்டினர் தமிழ் எல்லைக்கு ளிருந்துகொண்டு அதனைத் தெனமொழியென்று திசையடுத்து அங்ஙனம் விசேடித்தல் வேண்டாமையின அது வழக்காகாது" என்றுங் கூறுவர். அங்ஙன மாயின தெற்கெல்லைக்குளே யிருந்துகொண்டு தம்நாட்டைத் தென்னாடு என்றும், தம் அரசனைத் "தென்னவன்" என்றும், தம்மலையைத் "தென்மலை" என்றும் அம்மலையிலிருந்து வருங் காற்றைத் "தெனகாற்று" என்றுங் கூறிய ஆசிரியர் கொள்கைகளெல்லாம் அங்ஙனம் ஆகாவோ? அவைகளும் அழகிய நாடு அழகுடையவன் அழகியமலை முதலியனவாகப் பொருள்படுமோ? இவைகளுக்கு விடைதருதல் நன்று.

இங்ஙனம்

விடைவிரும்பி.

யாழ்ப்பாணம்
26-10-10.

இந்தியா.

கடுந்தண்டனை:—பெங்களூரில் ஷேக்மதார் எனனும் குதிரைக்காரன் தன் அயலவனாகிய காசிம்கான் எனனும் மற்றொரு குதிரைக்காரனோடு தீராப்பகை கொண்டிருந்தான். இப் பகையைச் சாதிக்கும்நோக்கமாக, மதார் என்பவன் தன் சத்துருவின் லாயத்தில் கட்டப்பட்டிருந்த 350 ரூபா பெறுமதியுள்ள மூன்று குதிரைகளுக்கு நஞ்சூட்டிக்கொன்றான. இவனுடைய கொடிய செய்கையை அறிந்து இவன் பகைவன இவனிற்பிராது கொண்டுவந்தான். அது ருசுவானதினால் நீதிபதி அத்துட்டனுக்கு 18 மாசக் கடுங்காவலும் 300 ரூபா அபராதமும் விதித்தனர்.

பிளேக் நோய்:—எலிகள் வீட்டுள் அலைந்து குடியிராவண்ணம் அரசாங்கம் ஊரைப் பாதுகாப்பின இந்நோய் முற்றாய்நீங்கிவிடுமெனபது பஞ்சாலதேசத்துத் தெனபுகைரதப் பாதைத் தலைவர் அபிப்பிராயம்.

கப்பற்சேதம்:—வம்பாய்த் துறைமுகத்திலிருந்து முப்பது மைலுக்கப்பால் நிறுத்தப்பட்டிருந்த "நிவல்கார்" என்னும் கப்பல், அதிலேற்றப்பட்டிருந்த கரியில் தீப்பற்றியதனால் எரிந்து நாசமடைந்தது.

மறியற்காரனின் துணிகரம்:—நாசிக்கிலிருந்து பூனாவைச்சேர்ந்த யெரோடா மறியற்சாலைக்கு, புகைரதத்தில் பல பெண்களும் ஆடவருமாயுள்ள மறியற்காரர் கொண்டுபோகப்பட்டனர். புகைரதம் வேகமாகச் செல்லும்போது அம்மறியற்காரரில் ஒருவன் வண்டியைவிட்டுக் குதித்து ஓடிவிட்டான், புகைரதம் உடனே நிறுத்தப்பட்டு அவனைத்தேடியும் அவன் அகப்படவில்லை., பொலிசார் அவனைத் தேடித்திரிகின்றார்கள்.

முடிசூட்டுக்கொண்டாட்டம்:—நமது அரசர் முடி தரிக்கும் தர்பார் கொண்டாட்டம் 1912ம் ௵ ஜனவரி ௴ 1ந்திகதி இந்தியாவில் நடைபெறும் இக்கொண்டாட்டத்தை முன்போல, அதிக் குடைக்கும் டெலகி நகரில் நடத்தாது இந்தியாவின் தலைநகராகிய கல்குத்தாவில் நடத்தவேண்டுமெனச் சில பத்திரிகைகள் பேசுகின்றன.

நாற்பதுபேர் மாண்டனர்:—கொச்சித் துறைமுகத்திலிருந்து உருவொன்று 40 கூலியாட்களை யேற்றிச் சிறிதுதூரம்சென்றபோது மற்றொருவள்ளத்தில் மோதியதனால் உருக்கவிழ்ந்து அதிலிருந்த 40 பேர் சமுத்திரத்தில் ஆழ்ந்துமாண்டனர்.

Foreign News.

பிறதேசவர்த்தமானம்

சீய தேச அரசர்:—இவர் சென்ற 23-ந் தேதி பனனிரண்டரை மணிக்குத் தேக வியோக மெய்தினர். இவருடைய புத்திர ராகிய இளவரசர் சிங்காசனம் வகித்தனர். இவர் 1853-ம் ௵ செப்டம்பர் ௴ 21ந்உ பிறந்தார். இவருடைய தந்தையார் இறந்தபின 1868-ம் ௵ ஒக்டோபர் ௴ 1-ந்உ சிங்காசன மேறினர். இவருக்கு முதல் மனைவியாரிடத்தில் இரண்டு குமாரத்திகளும் தற்கால விராணியாக விருக்கும் இரண்டாம் மனைவியாரிடத்தில் மூன்று குமாரர்களும் பிறந்தனர். இவருள் மூத்த குமாரரே இப்பொழுது செங்கோன் முறையைக் கைக்கொண்டனர். இவர் 1907-ம் வருடத்தில் முதல் இங்கு வந்து பௌத்த சமயிகளால் மிகஉபசரிக்கப்பட்டுத் திரும்பியவர்'

தந்தி யில்லாத தீபம்:—வல்டிமீர் போல்சன் என்னும் டனிஷ் நிபுணர், கம்பிமுதலிய கருவிகளின்றி மின்சாரவெளிச்சமேற்றுதற்குரிய வழியைக்கண்டு அதைக்காட்சிக்கு கொண்டுவந்தனர்.

உலகைச் சுற்றல்:—திருன்சை பீரியன் புகைரதப்பிரயாண ஒழுங்குகள் திருத்தமடைந்திருப்பதால், தற்காலம் ஒருவன் உலகமுழுதையும் 37 நாட்களில் சுற்றிவரக்கூடியதாக இருக்கின்றது.

மறையும் தீவுகள்:—சுமத்திரா வுக்கு மேல்புறமாகவிருக்கும் சில தீவுகள் வரவரச் சமுத்திரத்தில் ஆழ்ந்து மறைகின்றன. அத்தீவுகளில் நிறை தென்னைகளும் முற்றும் தண்ணீருள் மூழ்கி அழிந்துபோயின, இப்படியாயின கற்பகாலங்கடோறும் அழிந்துபோன நாடுகள் எத்தனை? சமுத்திரங் கொண்ட தேசங்களெத்தனை என்பதை அளவிடுதல் எங்ஙனம்.

கசபூமி:—மோரிசிந் என்றிடத்தில் கோலீரு என்றுங்கிராமமுள்ளது. இங்கே கோஷமும் மரணமும் சம்பவிப்பது மிகவரிது. இங்கே இரண்டுவருடங்களுக்கு முன்னே ஒவ்ஷதசாலைகளிருந்த ஒருவர் கோயாளிகளில்லாமையால் மருந்து விலைப்படாமைகண்டு அவ்வூரைவிட்டுப்போயினர். வைத்தியரொருவர் இவ்வருடத்தவிருள் அடுத்தவருடத்திலாவது தமக்குப் போதியவரும்படிகிடைக்குமென எண்ணித் தமதுகைப்பொருளைச் செலவிட்டுப் பலவருடங் காலங்கழித்தும், அக்கிராமத்தி லொருவனுக்காவது கோயின்மையால் மனஞ்சலித்து வேறிடத்துக்கு வலசையாகினர். எட்டுவருடங்களாகப் பிரேதங்கள் புதைக்கப்படாமையால் செமக்காலைகளின் அநேகப்பகுதிகள் பூங்காவனமாகத் திருத்தப்பட்டன. பிரேதஞ்சுமக்குந் தொழிலுடையோர்பலரும் புறதேசங்களுக்குச் சென்றனர்.

நாதனகருவி:—கிறமபோன் முதலிய பாடுங்கருவிகளைப்போல கினிட்டலோனென்னும் மற்றொரு நாதனகருவியை மிஸடர் தொமஸ் எடிசன் எனபவர் செய்திருக்கிறார். இக்கருவியால் படங்களைப்பேசும்படிசெய்கின்றார். அப்பிரதிமைகள் நனருகப்பாடவும், பலவித சம்பாஷணைகள் நடத்தவும், செவிக்கு இனபமுண்டாவதுபோல, அவைகள் முன்பிமுதலியவைகளை எதிர்த்தவிளையாடும்போது அக்குண்டுகள் கிழேவிழும் 'சத்தம் எவரையும் திகைக்கிடக்கச்செய்கின்றது.

தந்திஇரூபம்:—லண்டனுக்கும் சீனதேசத்துக்கும் 12500 ம் மைல்தூரம். வழுகிமிஷத்தி லொருவர் சீனவிலிருந்து லண்டன நகருக்குத் தந்திரூப மனுப்பி அங்கிருந்து மறுமொழியும் பெற்றனர். போகவர 25000 ம் மைல் தூரத்துச்செய்தியை இவ்வளவுநேரத்தள் இருபகுதியாரும் அறியக்கூடியதா யிருக்கின்றது.

ஒளுயும்கரியும்:—பேதருநகரிலொருவன இரண்டெரிகளையும் ஒருஒளுவையும் ஒருவகைவண்டியிற்பூட்டிச் சவாரி செய்கின்றனும்.

புகைக்குடி:—பிரானசில் 60 லட்சம்பேர் புகைக்குடிகாரரா யிருக்கின்றார்கள். இவர்களில் பதினேந்தில் 8 பங்கினர் சுருட்டுக்குடியரும், ஐந்தபங்கினர் 'பைப்' சுக்கானகுடியரும், இருபங்கினர் சிகறட் குடியருமாம், சிகறட்பாவிக்கும் இவ்வற்ப தொகையினருக்கு வருடமொன்றுக்கு 80 கோடிசிகறட்டுகள் விற்கப்படுகின்றதெனக் கணக்கிடுகின்றனர்.

மோட்டர்வண்டி:—லண்டனநகரில் இவ்வண்டிக்குரிய உத்தரவுச்சீட்டை ஒருவன பெறுதற்கு அரசாங்கத்தில் அறுபதுபொருத்தனைகள் செய்துகொள்ள வேண்டுமாம்.

பூங்காவனம்.—கிங்ஸ்ட்னெனனுமிடத்தில் ஒருவர் ஓர்பூங்காவனம் வைத்திருக்கின்றார். இதில் நாடோறும் 400 பலவகை மலர்கள்கொய்யலாம். 4 பெனஸ் விலை கொண்ட விரைகளைக்கொண்டே இத்தோட்டமுண்டாக்கப்பட்டதாம்.

படைவீரர்:—ஜர்மனி யரசாங்கத்தினிடமுள்ள படைவீரர்களுக்குப் பலவகைச்சகாயங்களுள. புகைரதங்களிற்பிரயாணஞ்செய்யின்பிரயாணச்சீட்டு அவர்களுக்குக் குறைந்தவிலைக்குக் கொடுக்கப்படுகின்றது. நாடகங்களுக்குச் செல்லின இலவசமாக அவர்கள் உத்தரவுச்சீட்டுப்பெறுவார்கள், ஏனைய வகுப்புகளிலுள்ள உத்தியோகஸ்தரெவரிலும் படைவீரர்களுக்குச் சலாக்கியங்கள் பலவுள.

Letters to the Editor.

கடிதங்கள்.

தமிழறிவும் சித்தாந்தக் கிளர்ச்சியும்.

அமுத கிரணத்தாற் குமுத மலர் விரித்தும் ஆடவரிலவயர் கூடியுட் களிப்ப, அலைகடல் பொங்கிக் குதூகலஞ்செய்ய, ஓரறிவுயிர்களும் பூரணமுற்றிட, தாரணிதனி கூதிஇப் போனங்கதற்ச்' சோடசகலைகளோ டீடவிரித்தும், பகைவிருள் கெடுக்கும் பாலசந்திர?

யான் கின்முகந் தருவதை நன்முகமாகப் பன்முகங்களுக்கும் பரவச் செய்குவாய். இந்தியா இலங்கை முதலாகிய பலவிடங்களும் பார்த்தேன். தற்காலம் அரசபாஷையாகிய ஆங்கிலேயமே எவ்வூரார்க்கும் தேங்கி வழிகிறது. அதனைக்கற்றுக் கீர்த்தி பெற்றுத் தக்க தக்க உத்தியோகத்தி லிருப்பவர் தக்க ஊதியப் [illegible]

சிகேலே பெரும்பாலும் தங்கள் காலத்தையும் கருத்தையும் விட்டுச் செல்வத்துக்கேற்றபடி அதற்கு வேண்டிய வழிகளிலேயே செலவிடுகிறார்கள்

கொழும்பிலுள்ள உத்தியோகஸ்தர் பெருஞ் செல்வர்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுகளிலோர் பகுதியிலேனும் வேறுவேறும் பூசையறையொன்றும் பூசைக்கு வேண்டிய உபகரணங்களும், அதிதிகள் சமையல் சாப்பாட்டுக்குரிய தளபாடங்களும், விக்கிரகத் தாபனமும், தேவப்படங்கள், அடியார் படங்களும், அருட்பாக்களும் அமைத்து அங்கே காலையில் தாம் எழுந்தவுடன் அவசியகருமம் நீத்தசுத்தி, ஸ்நானதிகள் முடித்து அநுட்டான முடித்துப் பூச்சொரிந்துவந்து தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை. முதலியவைகள் வைத்துத் தூபதீப கற்பூரம் பண்ணிப் பூப்போட்டுத் தோத்திரஞ் செய்து சாப்பிட்ட பின்னரே தங்கள் தங்கள் கடமைகளிற் செல்வார்கள். ஒவ்வொரு வீடுகளிலுமுள்ள பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளும் திகைத் கேட்டு இவ்வாறு செய்கிறார்கள். அந்திகாலத்திலும் விளக்கேற்றி இப்படியே செய்வார்கள். பிள்ளைகள் முதலாம் இரண்டாஞ் சைவ வினாவிடைகள் பாலபாடம் நீதிநூல்கள் அருட்பாக்கள் படிக்கவும் பழகவும் வீட்டுக்கு வீடு வேறு உபாத்திவைத்துப் பழக்குகிறார்கள். வீட்டு எசமான் எசமாட்டிகள் பெரியபுராணதி வசன நூல்களும் சித்தாந்த சாத்திர வாசிப்பு ஆக்ஷேப சமாதானம் வேறு 'அறிந்தவர்களை அழைத்துப் பழகுகிறார்கள். கிறமப்போன், லிஸ்புளுட் முதலியவைகளிலே அருட்பாக்கள் சிவபத்தி யுண்டாகத்தக்க தோத்திரங்கள் கீர்த்தனைகள் வினோதமாகப் பழகிப் பாடுவார்கள். இவைகளொவ்வொரு வீடுகளிலு மிருக்கும், ஆசாரங்களும் நடை யுடைகளும் எவரும் மதிக்கத் தக்கதாக விருக்கும், பன்னிரண்டு இராக்கதை, கூலிக்குத்தாலி கட்டின கதை, 'கொழுத்த சிரிப்பு முதலிய மனமாறத்தக்க வேசியர் கதை வாசியார்கள்.

ஆகவே, கொழும்பு நகரில் சைவப்பிரபுக்கள் உத்தியோகத்தர் இவ்வளவிற் றிருந்தவும், மற்றையதேசத்து நண்பர்கள் சிலரொழிய ஏனையரை இவ்வளவு சீர்திருத்தமில்லாமற் கெடுத்தது 'பாதிரி பள்ளிக்கூடப்பழக்கவொழுக்கங்களே. சைவ மணமும் வீசாத மிலேச்ச தேசங்களெல்லாம் இப்போது சைவம் நின்று கூத்தாட நமது தேசமோ இப்படிக் கெடுவது' இது கலிகாலவிந்தை.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்

ச. ஏரம்பையர்.

கொழும்பு
24-10-10.

ஓர் கதை.

(முற்றொடர்.)

நாதிமார் நாளாவர்த்தியில் சொல்லிவந்த தாப் போதனையினுல் "எறும்பூரக் கற்குழியும்" என்றபடி பத்மாவதியானவள் தன் பிராமண மரபுக்குரிய நல்லொழுக்க மனைத்தையும் அறவே கைவிட்டு புலால் முதலியவற்றை அரசனுடன் உண்டு களித்து வாழ்ந்து வந்தனள். அவளிடமாக அரசனுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது.

இப்படி யிருக்கையில் காசி யாத்திரை சென்ற அந்தணன் தன் உத்தேசப்படி திரவியஞ் சம்பாதித்துக் கொண்டு தன் வீட்டுக்கு வந்து நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் ஆதியோடந்தமாகக் கேள்வியுற்று ஒருவாறாக மனந்தேறி ஒரு யாசகனைப்போல வேஷம் பூண்டு அரசனுடைய அந்தப்புர வாயிலிற் சென்று, இரக்கக் குறிப்புடன தியாகம் கேட்டுக் கொண் டிருக்கையில் பத்மாவதி அவனைக் கண்ட மாத்திரத்தில் குரலொலியால் தன் பழைய நாயகனென்றறிந்து, கிழவா, இங்கு நீ கில்லாதே, நீ இன்னுனென்று நான அறிந்து கொண்டேன். அரசன் கண்டால் உன்னை இம்சிப்பான். உடனே நீ போய்விடு. நடந்து போன விஷயங்களைப்பற்றி இப்போது துக்கிப்பதிற் பயனில்லை. நீ கடைசியாக ஏதாவது என்னிடத்திற் கூறவேண்டியதாகவிருந்தால் உன் மனோபாவத்தை விரைவிற் சொல்லி முடியென்று அந்தரங்கமாக வசனித்தாள் அதற்கு அவன், உயிர்க்காதலியே! பெண்மணியே! என்னிடத்து நீ இருந்தபோது வறுமையினுல் அல்லற்பட்டுக்கொண் டிருந்தனை இப்போது நீ அட்ட ஐஸ்வரிய போக பாக்கியங்களை அநுபவிப்பதைக்காண என்கண்கள் பூரிக்கின்றன. "விதியே மதியாய்விடும்" என்னும் பெரியோர்வாக்கு அபத்தமாகுமா? நீ இப்படியாவது க்ஷேமமா யிருந்தால் போதும். ஆனுல் தனித்த உன்னிடத்தில் இன்னொரு வார்த்தை மாத்திரம் பேசிக் கடைசியாய் விடை பெற்றுக்கொண்டு தேசாந்தர யாத்திரை போய் என் காலை ஆண்டவனுக்கு ஒப்பித்து விடுவேன்: இவ்வொரு எண்ணத்தை மாத்திரம் நீ நிறைவேற்ற வேண்டும். அங்ஙனம் நீ செய்யாவிடில் உன் விசுவாசகாதகத்தை நினைத்து நினைந்து நான் பிராணனை விடுவேனென்று உறுதிமொழி கூறினுன்.

அதுகேட்டு பத்மாவதி "தொன்மை மறவேல்" என்றபடி பழைய சகவாசத்தை மறவாது நல்லது, அப்படியே ஆகட்டும். இவ்வூர்ப் பிடாரியார் ஆலயத்தைச் சேர்ந்த மண்டபத்தில் நீ வந்திரு. நான் இன்றிரவில் சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு உன்னை வந்து பார்க்கிறேனென்று வாக்குத் தத்தஞ் செய்து அவனை யனுப்பிவிட்டனள். அன்றிராத்திரி அதி விரைவாய்த் தன் குழந்தையைத் தூங்கச் செய்து பத்மாவதி சில பலகார வர்க்கங்களைச் சித்தம் பண்ணி வைத்துக்கொண்டு மண்டபத் தன்டை போவதாக நிச்சயித்திருக்கையில், அரசன் அன்று நெடுநேரம் வரையில் நித்திரை கொள்ளாது அவளிடத்துப் பற்பல விஷயங்களைப் பற்றி வேடிக்கையார்த்தமாய்ப் பேசிக் கொண்டே யிருந்தான். அந்தணனை வந்து சந்திப்பதாய் உறுதிமொழி கூறிய நேரம் கடந்துவிட்டபடியால், அவள் ஐயோ! கிழவன் வீணே மரிப்பானே என்று நினைத்து அரசன் குடிக்கவிருந்த பாலில் அவனுக்குத் தெரியாமல் விஷங்கலந்து அவனைக் குடிக்கச் சொல்லவே, அவன் அதை உட்கொண்டவுடனே பிரக்ஞையற்றுக் கிடந்தான்.

அன்று அந்திப்போதே அந்தக் கிழப்பிராமணன் அம்மண்டபத்தில் போய்ப் படுத்துக்கொண் டிருக்கையில் ஒரு நாக சர்ப்பம் அவனைத் தீண்டியபடியால் விஷம் தலைக்கேறி அவன் இறந்து கிடந்தான். அவ்விடத்திற்கு அதி தீவிரமாக வந்த பத்மாவதி அப்பிரேதத்தைக்கண்டு பலவாறுகத் துக்கித்தாள், அப்போது இராத்திரி நெடுநேர மாய்விட்டபடியாலும், மீண்டும்வீட்டை வந்தடைவதற்குத் திரும்பி வரத் துக்கமிகுதியாலும், பயத்தினுலும், காலெழாமல் அவ்விடத்திலேயே இருந்தனள்.

இவளிப்படி யிருக்கையில் அவ்வூரரசன் இவள் பாலிலிட்ட நஞ்சினுல் இறந்து போனமையினுலே அவளுடைய கொடுஞ் செய்கை அவ்வூர் முழுமையும் பரவி, எங்கும் பேரரவ முண்டாகவே அதைக் கேட்டுப் பத்மாவதி இனி இங்கிருந்தால் ஆபத்து விளையுமென்றஞ்சி மண்டபத்தை விட்டு நெடுந்தூரம் வரையில் அதி விரைவாய் ஒருவருக்குந் தெரியாமல் யாத்திரை செய்துகொண்டே இரண்டு மூன்று நாட் கழித்து ஒருநாள் இரவில் வேறொரு ஊரைச் சேர்ந்த மயானத்தின் வழியாய்த் தேகம் மெலிந்து மனம் நொந்து நடை தளர்ந்து சோர்வடைந்து போய்க்கொண்டிருந்தாள். அப்போது அதி சௌந்தரிய முள்ள ஒரு வேசி அவ்வூரில் இறந்துபோக அவளைக் கொண்டுவந்து அம்மயானத்தில் தகனஞ் செய்துவிட்டுத் துக்க சாகரத்தில் மூழ்கி அழுதுகொண்டே வருந் தாய்க் கிழவி, பத்மாவதியைக் கண்டு அம்மா! என் மகளே! மறுபடியும் நீ உயிர் பிழைத்து வந்தது என்பாக்கியம். இது பரியந்தம் நீ இறந்ததும் உன்னைக் கொண்டு வந்து நான் தகனஞ் செய்ததும் கனவுதானே? என்று பத்மாவதியைக் கட்டிக்கொண்டு முறையோ முறையோ வென்று அழுதனள். இக்கிழவியைக் கண்டு பிரமித்து ஒன்றுந் தோன்றுமல் பத்மாவதி யானவள் ஆதியோடந்தமாகத் தன் வரலாற்றைக் கூற, அக்கிழவி பத்மாவதியைப் பார்த்து அம்மா! இறந்து இதோ வெந்துகொண்டிருக்கிற என்மகளுக்கும் உனக்கும் ரூப லாவண்ணியத்தில் அணுவளவும் பேதமில்லை. நீ அவளைப் போலவே எனக்கு மகளாக விருந்து என் துக்கத்தை ஆற்றுவாயாக வென்று குறையிரந்தனள். பத்மாவதி அதற்குச் சம்மதித்து அவளுடன் சென்று அவ்வூரில் அத்தாய்க் கிழவியின் குலத் தொழிலை அருவருப்பின்றி நடத்திக் கொண்டு வந்தனள். இவ்வாறு நெடு நாளான பின் பத்மாவதி முன்னிருந்த ஊரை அரசாண்டு வரும் இவள் புத்திரன் இப்பொழுது யௌவன பருவமுடையவனுகி அக்கிய பிரதேசங்களைப் போய்ப் பார்க்க வேண்டு மென்று அவாக் கொண்டு இவ்வூரில் பத்மாவதி யிருக்கும் வீதிவழியாகக் குதிரைச் சவாரி செய்து கொண்டு போகையில் பத்மாவதியின் சௌந்தரியத்தைக் கண்டு மதிமயங்கி அவள் விலைமகளென வறிந்து அவ்வீட்டுக்குட் சென்றான்.

கொஞ்ச நேரத்தி லெல்லாம் அவன் பத்மாவதியின் முகச்சாடையும் தன்முகச்சாடையும் எல்லா விதத்திலும் ஒத்திருப்பதைக்கண்டு தன் உடைவாளை யுருவிக்கொண்டு அவளைப் பார்த்து நீ யார்! உண்மையைச் சொல்லுவாயாகில் உன்னை நான் விட்டு விடுகிறேன். இல்லாவிடில் இவ்வாளாயுதத்துக்கு உன்னை இரையாக்கிவிடுவேன் என்று பயமுறுத்தவே பத்மாவதி நடுநடுங்கி, ஆதியோடந்தமாகத் தன் விருத்தாந்தத்தைச் சொல்லி முடித்தனள். அதைக்கேட்டு அவன் புத்திரனுகிய அவ்வரசிளங் குமரன் தன் மாதாவை நோக்கி, மகாபாதகி, பரமதுரோகி! என் பிதாவைக் கொன்றதற்காக உனையும் பழிவாங்க என்மனம் எண்ணுகினும் கைமாத்திரம் எழவில்லை உன் கருப்பாயசத்தில் யான் பத்து மாசம் தங்கி யிருந்ததையும் நீ என்னைப் பத்துமாசம் சுமந்து வருந்தி ஈன்றெடுத்ததையும் நினைந்தே உன்னை இப்போது விட்டு விடுகிறேன். இனி உன்னை முகாலோபனமுஞ் செய்யமாட்டேன் என்று சொல்லித் தனது ஊருக்குத் திரும்பினன.

"தன் னெஞ்சே தன்னைச் சுடும்" என்னும் ஆன்றோர் கூறிய பிரமாணப்படி பத்மாவதி தன துர்க் கிருத்தியங்களை நினைக்குந்தோறும் மனச்சான்று அவளாற்ற முடியாத வகைக்கு இடித்திடித்து அவளை அல்லற்படுத்தினமையால், இனித் தற்கொலை செய்துகொள்வது உத்தமமெனறெண்ணி, அவ்வூர்க்குச் சமீபத்திலிருந்த ஆற்றங்கரையில் பெருந் தீ மூட்டி அக்கினிப் பிரவேசமாயினள்: அத்தருணத்தில் தெய்வ கதியால் அந்த ஆறு பெருக்கெடுத்து அவ் வக்கினியை அவித்து அவளை உயிரோடு நெடுந்தூரம் வரையில் அடித்துக் கொண்டு போகையில், மற்றொரு ஊரைச் சேர்ந்த புலத்துக்கருகாமையில் ஓர் இடையன பசுமாடு மேய்த்துக்கொண்டு நிற்கும்போது அவளைக் கண்டான. கண்டமாத்திரத்தில் அவன விரைந்தோடி வந்து தன இன்னுயிரையும் ஒரு பொருளென மதியாது அப்பிரவாகத்தி லிறங்கி அவளை வெளியே எடுத்து விட்டான. உடனே அவளுடைய அழகின மிகுதியைக்கண்டு அதிசய மடைந்து அவ்விடையன அவளைப்பார்த்து, நீ எனக்கு மனையாட்டியாயிருக்க வேண்டுமென் றுகூற, அதற்கு அவள் சம்மதிக்க வேண்டியதாயிற்று.

அதனமேல் அவ்விடையன பத்மாவதியை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்த் தனக்கு மனையாட்டியாக வைத்து அவளைப் பரிபாலித்து வந்தான. இப்படி யிருக்கையில் ஒருநாள் பத்மாவதியும் அவ்விடைச்சேரியிலிருந்த இன்னும் சில பெண்களும் தத்தம் குடங்களில் பால் தயிர் மோர் முதலியவற்றை யெடுத்துக்கொண்டு அவ்வூரில் வழக்கப்படி விற்பனை செய்வதற்காக ஒருநாள் புறப்பட்டார்கள். அவர்கள் அவ்வாறு புறப்பட்டு வருகையில் அவ்வூர் அரசனுடைய யானை மதமேறிக் கட்டுத் தறியை முறித்துக்கொண்டு, பாகனைக் கொன்று பிளிறிட்டு அவ் வீதிவழியாக ஓடி வந்தது. அவ்வூரிலுள்ள யாவரும் தத்தம் மெத்தைகளின்மீது ஏறி, அவ் வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவ்வூர் அரசனும் தன உப்பரிகையினமீது ஏறித் தன யானையின ஆரவாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான.

அந்த யானை இவ்வாறு ஓடி வருவதைக் கண்டு பயந்தபடியினுல் பத்மாவதியின தலையினமீதும் ஏனைய இடைப்பெண்களின தலைகள்மீதும் இருந்த குடங்கள் தவறி விழுந்து உடைபட்டன. மற்றப் பெண்களெல்லாம் ஐயோ! பால் போயிற்றே! அந்தோ! தயிர் போயிற்றே! என செய்வோம்! என செய்வோம்! என்று கைகளை நெரித்துக் கண்களில் நீர்சோர வயிற்றைப் பிசைந்துகொண்டு அழுதார்கள். பத்மாவதியோ தன மோர்க்குடம் உடைந்து போனதற்காக சற்றும் துக்கியாதவள் போல கைகொட்டிக் கலகலவென்று சிரித்துக்கொண்டு இருந்தவிடத்திலேயே இருந்தனள். இதை உப்பரிகையிலிருந்து பார்த்துக்கொண் டிருந்த அரசன பெரு வியப்படைந்து ஒன்றும் தோன்றுமல் உடனே ஏவலாட்களை விடுத்துப் பத்மாவதியை அழைத்துக் கொண்டு வரச் சொல்லி அவளைப் பார்த்து அம்மா! குடங்கள் உடைந்து போனதற்காக உன்னுடன் கூடவந்த பெண்களெல்லாரும் அழுகின்றார்கள். நீ ஒருத்திமாத்திரம் கைகொட்டிக் கலகலவென்று சிரிப்பது யாதுகாரணத்தால்? என்று கேட்டான். அதற்குப் பத்மாவதி அடியிற் கண்ட செய்யுளைக் கூறலாயினுள்:—

சாதிமார்க் கந்தவிர்ந் தன்னும ஆறுண்டு தாழ்ந்ததற் கேயழுவனே, தவ
முற்றபாலனைத் தனியற்று வேந்தை
சஞ் சூட்டிய தனுக்கழுவனே,
ஆதினா டாலிகட் டியபுருட னைக்கொன்ற
வரவர் தனக்கழுவனே, வருங்கான்
புருந்தியின் மறுமன்னர் தம்வேசி
யானதற் கேயழுவனே
வேதையான் மைந்தனைத் தழுவிவெங்
கனலின்கண் வீழ்ந்ததற் கேயழு
வனே, வெள்ளம் புகுந்ததன் னாடி
பல் லாடியே விட்டதற் கேயழு
வனே
நீதிபா லிடையனுக் கின்பமங் கையுமாகி
நின்றதற் கேயழுவனே, நிகரிலா
ராஜகெம் பீரனே நானிந்த நீர்மோ
ர்க்கு நின்றழுவதே.

பத்மாவதியின் பூர்வ விருத்தாந்தங்கள் யாவும் அடங்கிய இப்பாகரத்தைக் கேட்டு அரசன் பெருந் துக்க முடையானுக்குத் துக்கம் தோன்றுவதுபோலும்! என்று வியந்து பத்மாவதியைப் பார்த்து நீ போய்வாவென்று சொல்லி அனுப்பிவிட்டான். சிலநாள் பொறுத்து பத்மாவதி தன் தேகத்தின அழகெல்லாம் குன்றிப் பற்பல வியாதிகள் புகுந்து தளர்ந்து கோலுனறி

"நலமிலா மூப்புத்தனப் ந
டைதளர்ந் துரைதழுத் தச், சலமதே மி
கவும்தோனறித் தன்கென் னூறிச்சித்
தக், கலனமே பிறந்து கண்டார் கார்ச்
சித்தங் குமிழும் வண்ண, மலேவெலாஞ்
செய்யு மூப்பின் வருந்திய ரந்தோபா
ராய்."

என்று பெரியோர் கூறியபடி வயோதிகத்தினுல் உண்டாகும் பற்பலவியாதிகளுக்குள்ளாகி அவள் தன துர்க்கிருத்தியங்களுக்கேற்ற தண்டனையை இம்மையிலேயே அநுபவித்து மரித்தனள்.

இக்கதையின சாரத்தை நாமொவ்வொருவரும் கவனிக்க வேண்டியது அவசியகம். உலகத்தில் புருஷர்கள் பெரும்பாலும் வனப்பிற்சிறந்த வனிதையரையே தமது இல்வாழ்க்கைத் துணைவியராக்கிக்கொள்ள விரும்புகிறார்கள். பெண்களின் குணவிசேடங்களைக் கண்டறிந்து வியப்பதை விடுத்து வெளிப்புறத்தே தோன்றும் உதவியற்ற சருமத்தின அழகையே பெரும் பொருளென மதித்து அநேகர் மதிமயக்கங் கொள்வது பெரும் பேதமையாகும்.

"ஊமியுவர்த்தக்க வொனபது வாய்ப்
ப்புலனுங், கோதிக் குழம்பலக்குங் கும்
பத்தைப்-பேதை—பெருந்தோளி பெய்
வளாயெனனுமீப்போர்த்த கருந் தோ
லாற் கண்விளக்கப்பட்டு"

மலங்கள் பொதிந்து வெறுக்கத் தக்க நவத் துவாரங்கள் வழியாக அசுத்தத்தைக் கொண்டுவந்து ஒழுக்கும் தேகமாகிய குடத்தை' அறியாதவன, அதன மேல் மூடிக்கொண் டிருக்கும் அழகிற் சிறந்த தோலினுல் மயங்கிப் பெருந் தோளியுடையவளே! என்றும், வளையலணிந்தவளே! யென்றும் பலவாறுகத் துதிப்பானென்று பொருள் படப் பெரியோர் கூறிய பிரமாணங்களை யவர்கள் அறிந்திலரோ? இதனுல் கேவலம் குரூபிகளையே தமக்கு மனைவிகளாகக் கொள்ள வேண்டு மெனபதல்ல, ஆனுல் அழகு ஒனறினுலேயே மயங்குவது பேராபத்துக்கிடந் தரும் எனபதே எம் கருத்து.

அழகற்றவர்களாய்ப் பிறந்தும் சகல குல நலங்களும் பூரணமா யமையப் பெற்ற சில பெண்கள் புருஷர்களிடத்திலுள்ள மேற்கண்ட துரபிப்பிராயங் காரணமாகத் தீரா மனக் கிலேசமடைந்து அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக வருந்துவதுமனறி, பிராணத் தியாகம் செய்யவும் நேரிடும். சற்குணங் காரணமாக வனறி வெளிப் புறத்தே தோனறும் அழகின காரணமாக யாதொரு பெண்ணை நாம் வியந்து நேசிப்பது தீம்பாலைப் பயக்கத் தக்க பசுவை வெறுத்துப் பளபளவென திருக்கும் மேனியை யுடைய வேங்கைப் புலியை வளர்த்து அதற்கிரையாகி மாளும் அவிவேகியின செய்கையை ஒக்கும்.

அல்லலே பெண்ணெனப் பிறத்தலாங்கதி
னல்லலே யிளமையிற் சிறத்தலாங்கதி
னல்லலே கட்டழ குடைமையாங்கதி
னல்லலே யிரவலர் சார்பினுருதல்.

இவ்வுலகத்தில் பெண்ணுகப் பிறத்தலே அல்லலுக்கிடமாகும். வயோதிகத் தனமை யடையாமல் பாலியதசையி லிருப்பது அதனிலுமல்லலாகும். இளமைப் பருவத்தோடுங்கூடப் பேரழகு அமைந்திருத்தல் அதனினுமல்லலாகும். 'தரித்திர தசையினுள்ள ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டிருத்தல் அதனினும் பெருந்த அல்லலாகும்.

இங்ஙனம்

கதானந்தன்.

வாழிய வாழிய மன்னவர் செங்கோல்
வாழிய வாழிய மாதவர் சங்கம்
வாழிய வாழிய மாவுல கெல்லாம்
வாழிய மாநிலம் வாலமதிதானே.

Printed and Published by
M. V. Ponnampalapillai, at the
"Kuga Dasa" Press, No. 103
Cheku Street, Colombo.

மு. வெ. பொன்னம்பல
Proprietor